# பெப்ரவரி – 19 – செவ்வாய்

## புனித கொன்ராட்

**ஆண்டவரின் குரல் வலிமைமிக்கது: ஆண்டவரின் குரல் மாட்சிமிக்கது. திபா. 29:4**

## முதல் வாசகம் : தொடக்க நூல் 6:5 –8,7:1 –5,10

மண்ணுலகில் மனிதர் செய்யும் தீமை பெருகுவதையும் அவர்களின் இதயச் சிந்தனைகளெல்லாம் நாள் முழுவதும் தீமையையே உருவாக்குவதையும் ஆண்டவர் கண்டார். மண்ணுலகில் மனிதரை உருவாக்கியதற்காக ஆண்டவர் மனம் வருந்தினார். அவரது உள்ளம் துயரமடைந்தது. அப்பொழுது ஆண்டவர், "நான் படைத்த மனிதரை மண்ணிலிருந்து அழித்தொழிப்பேன். மனிதர்முதல் கால்நடைகள், ஊர்வன, வானத்துப் பறவைகள்வரை அனைத்தையும் அழிப்பேன். ஏனெனில் இவற்றை உருவாக்கியதற்காக நான் மனம் வருந்துகிறேன்" என்றார். ஆனால் நோவாவுக்கு ஆண்டவரின் அருள் பார்வை கிடைத்தது. அப்பொழுது ஆண்டவர் நோவாவிற்குக் கூறியது: "நீ உன் குடும்பத்தார் அனைவரோடும் பேழைக்குள் செல். ஏனெனில்,இத்தலைமுறையில் உன்னையே நான் நேர்மையானவனாகக் காண்கிறேன். தக்க விலங்குகள் எல்லாவற்றிலிருந்தும் ஆணும் பெண்ணுமாக ஏழு சோடிகளையும், தகாத விலங்குகளிலிருந்து ஆணும் பெண்ணுமாக ஒரு சோடியையும். வானத்துப் பறவைகளிலிருந்து ஆணும் பெண்ணுமாக ஏழு சோடிகளையும் மண்ணுலகெங்கும் அவற்றின் இனங்கள் உயிர் பிழைத்துக் கொள்வதற்காக உன்னுடன் சேர்த்துக் கொள். ஏனெனில் இன்னும் ஏழு நாள்களில் மண்ணுலகின்மேல் நாற்பது பகலும் நாற்பது இரவும் நான் மழை பெய்விக்கப்போகிறேன். நான் உருவாக்கிய உயிரினங்களை எல்லாம் இந்த நிலத்திலிருந்து அழித்தொழிப் பேன்." ஆண்டவர் கட்டளையிட்டபடியே நோவா எல்லாவற்றையும் செய்தார். ஏழு நாள்களுக்குப்பின் மண்ணுலகில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

**பதில்பாடல்:** ஆண்டவர் தம் மக்களுக்கு சமாதானம் அருள்வாராக

## நற்செய்தி : மாற்கு 8 : 14 - 21

அக்காலத்தில், சீடர்கள் தங்களுக்குத் தேவையான அப்பங்களை எடுத்துச்செல்ல மறந்துவிட்டார்கள். படகில் அவர்களிடம் ஓர் அப்பம் மட்டுமே இருந்தது. அப்பொழுது இயேசு, "பரிசேயர், ஏரோதியர் ஆகியோரது புளிப்பு மாவைக் குறித்து மிகவும் கவனமாயிருங்கள்" என்று அவர்களுக்குக் கட்டளையிட்டார். அவர்களோ தங்களிடம் அப்பம் இல்லையே என்று ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டிருந்தார்கள். இதை அறிந்த இயேசு அவர்களை நோக்கி, "நீங்கள் உங்களிடம் அப்பம் இல்லை என ஏன் பேசிக் கொள்ளுகிறீர்கள்? இன்னுமா உணராமலும் புரிந்து கொள்ளாமலும் இருக்கிறீர்கள்? உங்கள் உள்ளம் மழுங்கியா போயிற்று? கண்ணிருந்தும் நீங்கள் காண்பதில்லையா? காதிருந்தும் நீங்கள் கேட்பதில்லையா? ஏன், உங்களுக்கு நினைவில்லையா? ஐந்து அப்பங்களை நான் ஐயாயிரம் பேருக்குப் பிட்டு அளித்த போது, மீதியான துண்டுகளை எத்தனை கூடைகள் நிறைய எடுத்தீர்கள்?" என்று அவர் கேட்க, அவர்கள் "பன்னிரண்டு" என்றார்கள். "ஏழு அப்பங்களை நான் நாலாயிரம் பேருக்குப் பிட்டு அளித்தபோது மீதித் துண்டுகளை எத்தனை கூடைகள் நிறைய எடுத்தீர்கள்?" என்று கேட்க, அவர்கள், "ஏழு" என்றார்கள். மேலும் அவர் அவர்களை நோக்கி, "இன்னும் உங்களுக்குப் புரியவில்லையா?" என்று கேட்டார்.

**தியானம்:** இயேசு தம் சீடர்களிடம் கேள்வியை அடுக்கிக்கொண்டே போகின்றார். அக்கேள்விகளுக்கு நேரடியாக பதில் கூற முடியாமல் சீடர்கள் திணறிப்போயிருப்பார்கள். இயேசு கேட்ட கேள்விகளின் பின்னனி என்ன? இயேசு இருமுறை பல்லாயிரக்கணக்காண மக்களுக்கு உணவளித்ததைச் சீடர்கள் நேரடியாகக் கண்கொண்டு பார்த்திருந்தார்கள். இப்போது தங்களிடம் அப்பம் இல்லையே என்று அவர்கள் பேசிக்கொண்டிருக்கின்றார்கள். ஒருவேளை இதற்கு முன் செய்தது போல இப்போதும் இயேசு அதிசயமான முறையில் தங்களுக்கு உணவளிப்பார் என அவர்கள் நினைத்தார்களா? இயேசு அவர்களை நோக்கி "உங்கள் உள்ளம் மழுங்கிப் போயிற்றா?" என கேட்பது நம்மைச் சிந்திக்க தூண்டுகின்றது. மனித எதிர்பார்ப்புக்களை தாண்டிச் செல்லவேண்டும் என இயேசு தம் சீடர்களுக்கு அழைப்புவிடுக்கின்றார். அவர்கள் இயேசுவை அதிசயங்கள் புரிகின்ற பெரிய மனிதர் என்று மட்டுமே நினைத்தால் அது தவறு என இயேசு உணர்த்துகின்றார். இயேசுவின் வழியாகக் கடவுள் செயலாற்றுகின்றார் என்பதை உணர்கின்ற இதே நேரத்தில் இயேசு நம் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் மனிதரல்ல மாறாக அவர் தம்மையே வெறுமையாக்கி துன்பங்கள் வழியாக நமக்குப் புது வாழ்வு தருகின்றார்.